செ.வெ.எண்:66 நாள்:30.09.2019

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் உள்ள 201 ஊராட்சிகளிலும் **02.10.2019** அன்று காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கிராம சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

அக்கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது செலவினம் குறித்து விவாதித்தல். 2019-2020 ஆம் நிதியாண்டு வளர்ச்சி பணிகளுக்கான திட்ட அறிக்கை ஒப்புதல் பெறுதல். நீர் வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் குடிமராமத்து பணிகள் குறித்து விவாதித்தல். குடிநீரை சிக்கனமாகவும், முறையாகவும் பயன்படுத்துதல் குறித்து விவாதித்தல். கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல். ஊராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்ட பணிகளின் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள் குறித்து விவாதித்தல். மக்கள் திட்டமிடல் இயக்கம் வெற்றிகரமாக செயல்படுத்திட தீர்மானித்தல். ஊட்டச்சத்து இயக்கம் குறித்து விவாதித்தல். பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி மற்றும் உபயோகத்தினை தடை செய்தல். உணவு பொருள் வழங்குதல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு. ஜல்சக்தி இயக்கத்தினை மாபெரும் இயக்கமாக செயல்படுத்த தீர்மானித்தல். முழு சுகாதாரம், முன்னோடி தமிழகம் திட்ட செயல்பாடுகள் குறித்து விவாதித்தல். கழிப்பறை இல்லாதோர் விவரப்பட்டியல் எடுத்தல் சுகாதார நலன் கருதி கழிப்பறையை பயன்படுத்த வலியுறுத்தல், திறந்த வெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் தீமைகளை எடுத்துரைத்தல். திடக்கழிவு மேலாண்மை திட்டம். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பணிகள் குறித்து விவாதித்தல். மகளிர் திட்டம்- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க பணிகள் குறித்து விவாதித்தல். ஊரகப்பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்த, எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல். தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல் யோஜ்னா திட்டம் குறித்து தெரிவித்தல் மற்றும் விண்ணப்பம் கோருதல். தேசிய மற்றும் தமிழ்நாடு வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வட்டிமானிய திட்டம் குறித்து மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு தெரிவித்தல். பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்), பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜ்னா (PMSBY) காப்பீடு திட்டம் மற்றும் அட்டல் பென்சன் யோஜ்னா (APY) குறித்து மக்களுக்கு விளக்குதல். அம்மா இருசக்கர வாகனத் திட்டம். குழந்தைகள் திருமணம், குழந்தை கடத்தல், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளை தடுத்தல் மற்றும் இலவச கட்டாய கல்வி திட்டம் குறித்து விவாதித்தல் போன்ற பொருட்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

பொதுமக்கள் மற்றும் ஊராட்சி செயலாளர்களால் கொண்டுவரப்படும் இதர பொருள்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட உள்ளதால், அந்தந்த பகுதிகளில் உள்ள பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் திரளாக கிராமசபைக் கூட்டத்தில் கலந்துக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**